1978 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் சொன்ன நல்ல யோசனைகளைப் பரிசீலனை செய்து அரசு ஆவன உடனடியாகச் செய்யும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: ஏற்கனவே நிலவள வங்கிகள் தாலுகாவுக்கு ஒன்று வீதம் செயல்பட்டு வந்தன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது ஊராட்சி ஒன்றிய அளவில் ஒரு நிலவள வங்கி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிடப்பட்டு அந்த அடிப்படையில் இன்னும் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் நிலவள வங்கிகள் ஏற்படுத்தப்படாமல் இருக்கின்றன. அந்த அடிப்படையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு நிலவள வங்கியை ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: நான் ஏற்கனவே தெளிவாகச் சொன்னேன். இன்றைக்குச் சில விதிமுறைகள் இருக்கின்றன. குறிப்பாக இரண்டு விதி முறைகள் இருக்கின்றன. மத்திய அரசு, மாநில அரசு, விவசாய மறு நிதி அபிவிருத்திக் கழகம் உலக வங்கியுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின்படி மாநிலத்தின் எந்த ஒரு பகுதியிலும் விவசாய அபிவிருத்திக் கழகத்தின் முன் அனுமதியின்றி புதிய வங்கிகளை ஏற்படுத்தக் கூடாது. இதன்படி தற்போதைய நிலையில் புதிய வங்கிகளை ஏற்படுத்த வேண்டுமானால் இந்தப் புதிய விதிமுறையைக் கடைப் பிடித்தாக வேண்டும். இரண்டாவது, தற்போது நிலவள வங்கிகளைத் தனித்து இயங்கும் துறையின் அடிப்படையில் மாற்றியமைக்க அரசு உத்தேசித்திருக்கும் காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை பரிசீலிக்கப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இராமநாதபுரம் மாவட்டத்தில் நில அளவை.

*வினா 4— திரு. செ. சிவசாமி:— மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) முகவை மாவட்டத்தில் 1975-76-ல் புதிய சர்வே நடத்தப்போவதாக ஸ்தலம் ஒன்றுக்கு ரூ. 12 வீதம் வசூல் செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வசூலான தொகை விபரம் என்ன?

(இ) இத் திட்டம் அமுல் நடத்தப் படாததற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) மொத்தம் வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 8,97,574.

(இ) இத் திட்டத்தை இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் அமுல் செய்து நிறுத்தி விடக்கூடாது என்பதாலும், தமிழ்நாடு மாநிலம் முழுவதும் இத்தகைய திட்டத்தை அமுல் செய்வதானல் பெருந்தொகையை அரசு செலவு செய்ய நேரிடும் என்ற காரணத்தாலும் நிலப்பதிவு சம்பந்தமாக அரசின் பரிசீலனையில் ஒரு மாற்றுத் திட்டம் உள்ளதாலும் இத்திட்டம் நிறைவேற்றப் படவில்லை.

திரு. செ. சிவசாமி : எட்டு லட்சத்து சொச்சம் ரூபாய் வசூல் செய்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனல் அது சம்பந்தமாக இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. அது சம்பந்தமாக ஒன்று நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அரசு ஆணை எண் 1034 சி. டி., தேதி 22-7-1976-ல் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ரா. மார்க்கபந்து : நில அளவு பற்றி தமிழகம் பூராவும் அரசாங்கமே முயற்சி எடுத்து எல்லா நிலங்களையும் சப்டிவிஷன்களாகச் செய்ய முன்வருமா ? 'மினிமம் ஸ்மால் ஹோல்டிங்ஸ்' என்பதை அடிப்படையாக வைத்து சர்வே செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தமிழகத்தைப் பொறுத்தவரை சிறு நிலச்சுவான்தார்கள்தான் ஆயிரக்கணக்கில் லட்சக்கணக்கில் இருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட பட்டாதாரர்கள் இருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் பணியை அரசு செய்ய வேண்டுமென்றால் 56 லட்சம் ரூபாய் அதிகமாகிறது. மாநிலம் பூராவும் அரசே செய்ய வேண்டுமென்றால் அதிகமாகச் செலவு செய்ய வேண்டியிருக்கும். இருப்பினும் பட்டாக்களை கூட்டுப் பட்டாவில் இருந்து மாற்றி தனிப் பட்டாவாக ஆக்க வேண்டுமென்ற இந்தத் திட்டத்தைச் செய்ய அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒ. சுப்பிரமணியன் : மாநிலம் பூராவும் இது அமல் படுத்தப்பட வேண்டும், ஆகையால் தற்போது இராமநாதபுரத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் பரிட்சார்த்தமாகச் செய்து பார்த்து

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1978 ஆகஸ்ட் 31]

அதன் மூலம் கிடைக்கக்கூடிய அனுபவத்தை மாநிலம் முழுவதும் விஸ்தரிக்கலாமே. ஆகவே, வசூலித்த தொகையைத் திருப்பிக் கொடுக்கும் யோசனையைக் கைவிட்டு உடனடியாக இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த வேலையைத் துவங்குவார்களா ?

(முற்பகல் 9-20.)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் மட்டுமல்ல, மற்ற மாவட்டத்துக்காரர்கள் எங்களுக்கு ஏன் செய்யவில்லை என்று கேட்பார்கள் என்ற காரணத்தால் முந்தைய அரசு இந்தத் திட்டத்தை கைவிட்டிருக்கிறது என்று கருதுகிறேன். இப்போது எல்லா இடங்களிலும் செய்யலாமா என்ற முறையிலே சில திட்டங்களைப் பற்றி அரசு ஆலோசித்துக் கொண்டு இருக்கிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நம்முடைய அரசு சிறிய விவசாயிகளுக்கு ஏராளமான வசதிகளைச் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறது. ஆனால் சிறிய விவசாயிகள் என்ற பட்டியலில் பல குளறுபடிகள் ஏற்பட்டிருக்கின்றன. சிறிய விவசாயிகளின்மீது தனி அக்கறை செலுத்தி இந்த அரசு அவர்களுக்கு எல்லாம் உண்மையான பட்டா புத்தகத்தை வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

ராணிப்பேட்டை வட்டத்திலுள்ள 'ப்ரி ஹோல்ட்' கிராமங்கள்.

* வினா. 5—திரு. துரை முருகன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வடாற்காடு மாவட்டம், ராணிப்பேட்டை வட்டம், அவரைக்கரை, புளியங்கண், நவ்லாக் ஆகிய கிராமங்கள் ப்ரி ஹோல்ட் கிராமமாக உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அவற்றை ரெவின்யூ கிராமங்களாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) வடாற்காடு மாவட்டம், ராணிப்பேட்டை வட்டம், அவரைக்கரை, புளியங்கண் உள்ளிட்ட நவ்லாக் கிராமம் ப்ரி ஹோல்ட் கிராமமாக உள்ளது.

(ஆ) அதனை ரயத்துவாரியாக மாற்றுவதற்கு அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.